**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**<u>O.S.No.428/2022</u>**

**வா.சா. 1 கருப்புச்சாமி** 27.02.2023

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

தாவா சொத்துக்கள் 1929 ம் ஆண்டுக்கு முன்பு அரசுக்கு சொந்தமான புறம்போக்கு நிலம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது . எனது தகப்பனார் 1ம் வாதி 1973 ல் கிரையம் வாங்கிய போது தாவா சொத்துக்கள் அவரது முன் பாக்கியதர்களுக்கு எப்படி பாத்தியப்பட்டது என்பதுக்குரிய ஆவணங்களை பெற்று பார்த்து பரிசிலனை செய்து கிரையம் வாங்கினாரா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது .வாதிகள் பிற்படுத்தப்பட்ட இனத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான் . எனது தகப்பனாருக்கு கிரையம் செய்த கொடுத்த முன் உரிமையாளர் பட்டியல் இன வகுப்பை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் அரசு பாத்தியப்பட்டது அது பட்டியல் இன மக்களுக்கு அரசால் பஞ்சம நிலங்கள் கொடுக்கப்பட்டு இருந்தது என்றால் சரிதான் . தாவா சொத்துக்கள் பஞ்சநிலம் என்பதால் அது பட்டியல் இன மக்களுக்கு கொடுக்கப்பட்ட நிலம் என்பதாலும் அந்த நிலத்தை மற்றொரு பட்டியல் இனமக்களுக்கு தான் கொடுக்க முடியும் என வருவாய் நில ஆணை எண் 15(1) தேதி 20.09.1929 குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியும் . ஆனால் அந்த அரசாணையில் வேட்டுவ இன மக்கள் வாங்கிக் கொள்ளலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது . அதனால் தான் எனது தகப்பனார் அந்த நிலத்தை வாங்கினார் . பட்டியல் இன மக்களை தவிர மூன்றாம் இன மக்கள் அந்த சொத்துக்களை கிரையம் வாங்க வேண்டும் என்றால் மாவட்ட சார் ஆட்சியரிடம் முன் அனுமதி பெற வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.10 அடங்கல் கணக்கு நகலில் பஞ்சமை நிபந்தனைகள் மீறப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் . வா.சா.ஆ.11 ஆவணத்தில் காலம் 18ன் கண்டிசன் ஜாரி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் . வா.சா.ஆ.12 முதல் வா.சா.ஆ.14 அடங்கல் காலம் 18 ல் பஞ்சமை நிலம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு அந்த நிலங்களின் நிபந்தனைகள் குறித்து தெரிந்துக்கொண்டும் அந்த

நிபந்தனைகளை பின்பற்றாமலும் 3ம் பிரதிவாதியிடம் முன் அனுமதி பெறாமலும் தாவா சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளது சட்டப்படிதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. அதற்கு பின்னிட்டு 3ம் பிதிவாதி விசாரணையில் மேற்படி விவரங்கள் தெரியவந்ததால் எங்கள் பெயரில் இருந்த பட்டாவை ரத்து செய்து உத்தரவிட்டுள்ளார் என்று சொன்னால் சரிதான். சார் ஆட்சியர் உத்தரவை எதிர்த்து நான் மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு தாக்கல் செய்து மேல்முறையீட்டு மனுவும் சார் ஆட்சியர் வழங்கிய உத்தரவை உறுதி செய்து தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல . மாவட்ட வருவாய் அலுவலர் பழனி சார் ஆட்சியர் வழங்கிய உத்தரவை ஊர்ஜிதம் செய்து தான் உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றும் நான் சொல்வதுபோல் நீதிமன்றத்தை அணுகி பாகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்தி உத்தரவு வழங்கப்படலாம் என்று சொன்னால் சரியல்ல . நான் வேட்டுவர் இன வகுப்பை சேர்ந்தவர் என்றும் வழக்கு சொத்துக்களை பட்டியல் இன ஜாதிகளிடமிருந்து கிரையம் பெறுவதற்கு எங்களுக்கு தகுதி உள்ளது என்பது உண்மை என்றால் அந்த விவரத்தை எங்கள் பெயரிலுள்ள பட்டாவை ரத்து செய்யும் சமயத்திலேயே 3ம் பிரதிவாதியிடம் தெரிவித்து இருப்பேன் என்று சொன்னால் சொல்லியுள்ளேன் . பஞ்சமநிலத்தை முறைகேடாக அனுமதி பெறாமல் பட்டியல் இன சாதிகளிடமிருந்து கிரையம் பெற்றதால் அது செல்லாது என்றும் , வழக்கு சொத்துக்களில் தங்களுக்கு எவ்வித உரிமையில்லைஎன்றும், விதிமீறல் செய்து நான் கியைம் பெற்றதால் அதை ரத்து செய்வதற்கு 3ம்பிரதிவாதிக்கு உரிமையுள்ளது என்றும் , வழக்கு சொத்துக்கள் சம்பந்தமாக தான் கோரியுள்ள பரிகாரம் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2023.03.01 10:26:47 +0530

சார்பு நீதிபதி,
ஒட்டன்சத்திரம்.